மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் நகர பஞ்சாயத்து பகுதிக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் இன்னும் விரிவுபடுத்தப்படவில்லை. காட்டுமன்னார்கோவில் நகர பஞ்சாயத்து பகுதிக்கு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினுடைய பணிகள் விரிவுபடுத்துகின்ற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படி குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினுடைய பணிகள் இந்தப்பகுதிக்கு விரிவுபடுத்தப்பட்டால் அப்போது முதல் கட்டமாக குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுப் பணிகளும், அதற்குப் பின்னால் வீடுகள் கட்டித் தருவதற்கு உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

33—

பவானிசாகர் தொகுதியில் புதிதாகத் தொழிற்பேட்டைகள் துவங்குதல்

*** 35907**—*திரு. வி. கே. சின்னசாமி:*

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி, நம்பியூர், புளியம்பட்டி ஆகிய பகுதிகளில் புதிதாகத் தொழிற்பேட்டை துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டுக்கும் இல்லை என்று சொல்கின்றார். அது ஏன் இல்லை. என்ன காரணத்தினால் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? மேலும் நாங்கள் இரண்டு பேரும் ஒரே மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். இப்படி பதில் சொல்லிவிட்டார்களே, என்ன காரணத்தினால் இல்லை என்பதை

தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அது வருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அரசிடம் எந்தச் செயற்குறிப்பும் இல்லை என்பதைத்தான் நான் தெரிவித்தேன்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தொழில் துறையிலே இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தை மூன்றாவது இடத்திற்கு கொண்டு வந்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், இந்த நம்பியூர், புளியம்பட்டி போன்றவை வறட்சி மிகுந்த பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதி மக்களுடைய விவசாயக் கிணறுகளும் பொய்த்து விட்ட காரணத்தினால் பிழைப்பிற்காக திருப்பூர் போன்ற பகுதிகளுக்குச் சென்று கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் மறு பரிசீலனை செய்து, அந்தப் பகுதியில் பெரியார் மாவட்டத்திலே நிறைய பேர் தொழில் துவங்க வருகின்றார்கள். இப்போது பெருந்துறைப் பகுதியிலே ஒரு தொழிற்பேட்டையை நிறுவ இருக்கின்றார்கள். ஆகவே, இப்படி வருகின்றவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை சொல்லி, இந்தப் பகுதியிலே தொடங்கினால் ஆட்கள் நிறைய பேர் கிடைப்பார்கள். நிலமும் இலவசமாகக்கூட தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் மறு பரிசீலனை செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது 20 தொழில் முனைவர் அங்கே தொழில் துவங்க முன் வந்தார்களேயானால் இதைப்பற்றி அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 34, திரு.என்.ஆர்.சிவபதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

34—

உலக வங்கி உதவியுடன் முள்ளிப்பாடி பாசன வாய்க்காலில் தார்ச் சாலை அமைத்தல்

*** 36622**—*திரு. என். ஆர். சிவபதி:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—